# தூக்குக்கு தூக்கு!



ராஜீவ் காந்தி கொலை வழக்கில் நளினி, முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டு அவர்களுக்கான தூக்குக் கயிறுகள் தயாராகிவிட்ட நிலையில், மரண தண்டனை என்பதே ஒரு நாகரிக சமுதாயத்தில் தேவைதானா என்ற விவாதம் கூர்மையாகியிருக்கிறது.

இந்தக் குறிப்பிட்ட வழக்கில் உள்ள சில சட்டச் சிக்கல்களின் அடிப்படையில் பார்த்தால், மரண தண்டனை என்பது மிகையானது. தடா சட்டத்தின் கீழ்தான் இதில் வழக்கு பதிவு செய்யப்பட்டு விசாரணை நடந்தது. தடா சட்டம் இதற்குப் பொருந்தாது என்று மூன்று உச்ச நீதிமன்ற நீதிபதிகள் தீர்ப்பளித்து, குற்றம் சாட்டப்பட்டவர்கள் அனைவரையும் தடா சட்டக் குற்றங்களிலிருந்து விடுவித்திருக்கிறார்கள், நீதிபதிகள் தண்டனை அளித்த ஏழு பேரும், இந்தியன் பீனல் கோடின் கீழ்தான் தண்டிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் அதற்கான அடிப்படையான சாட்சியங்கள் எல்லாம் தடா சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட சாட்சியங்களாகும். குறிப்பாக, குற்றம் சாட்டப்பட்டவர்கள் போலீஸ் காவலில் இருந்தபோது, கொடுத்த ஒப்புதல் வாக்குமூலங்கள், தடா சட்டத்தின் கீழ் செல்லுபடியாகக்கூடியவை. ஆனால், இந்தியன் பீனல் கோடு, இந்திய சாட்சிய சட்டங்களின் கீழ் இத்தகைய வாக்குமூலங்கள் அப்படியே ஏற்றுக் கொள்ள முடியாதவை. அதிலும் இந்த வாக்கு மூலங்கள், துன்புறுத்திக் கட்டாயமாகப் பெறப்பட்டவை என்று நடுவர் முன்பு குற்றம் சாட்டப்பட்டவர்கள் தெரிவித்தால், அவை மேலும் மரியாதை இழந்துவிடுகின்றன. தடா சட்டம் பொருந்தாது என்று தீர்ப்பளித்த பிறகும், தடாவின் கீழ் பெறப்பட்ட வாக்கு மூலங்களை மட்டும் உச்ச நீதிமன்றம் எப்படி ஏற்றுக்கொள்ள முடியும்? அவற்றின் அடிப்படையில் எப்படி மரண தண்டனை விதிக்க முடியும் என்ற சட்டச் சிக்கல் பல்வேறு வழக்கறிஞர்களால் எழுப்பப்பட்டிருக்கிறது தவிர ஒரே சதிக் குற்றம் புரிந்த ஏழு பேரில், மூவருக்கு மட்டும் மரண தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. அந்தக் குற்றச்சாட்டைத்தவிர வேறு பெரிய குற்றச்சாட்டு ஏதுமற்ற நான்கு பேருக்கு மட்டும் மரண தண்டனை தரப்பட்டுள்ளது.

மரணதண்டனையை நிறைவேற்றிவிட்ட பிறகு, எதிர்காலத்தில் இந்தத் தீர்ப்பு சட்டக் கோளாறுகள் உடையது என்று முடிவாகுமானால், தீர்ப்பால் உயிர் இழந்தவர்களுக்கு ஏது நீதி?

ராஜீவ் காந்தி போன்ற அரசியல் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு தலைவரைக் கொன்றவர்களைத் தூக்கில் போடாமல் விடக்கூடாது. ஏழு பேரையுமே தூக்கில் போட வேண்டும் என்று உணர்ச்சி அடிப்படையில் ஒரு எதிர்வாதம் வைக்கப்படுகிறது.

கொல்லப்பட்டது ராஜீவா, ராமசாமியா என்பது முக்கியமே அல்ல. எந்தக் குற்றமானாலும், குற்றம் செய்தவர்களுக்கு அதிகபட்சத் தண்டனையாக ஆயுள் தண்டனை மட்டும்தான் இருக்க முடியும். ஒரு உயிரைப் பறிக்கும் உரிமை எப்படி குற்றவாளிக்கு இல்லை என்கிறோமோ, அதே உரிமை அரசுக்கும் நீதிமன்றத்துக்கும்கூட இருக்க முடியாது என்பதை ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

எந்த பிரிட்டிஷ் சட்டமுறைகளை இந்தியா பின்பற்றுகிறதோ, அங்கேயே மரண தண்டனை ஒழிக்கப்பட்டுவிட்டது. அது மட்டுமல்ல; அண்மைக் காலத்தில் அங்கே மவுண்ட்பேட்டன் பிரபு (இந்தியாவில் வைஸ்ராய், கவர்னர் ஜெனரலாக இருந்த அதே மவுண்ட்பேட்டன்தான்) கொடூரமான முறையில் கொலை செய்யப்பட்டார், அவரைக் கொன்றவர்களைத் தூக்கிலிட வேண்டுமென்று யாரும் அங்கே உணர்ச்சி வசப்பட்டு குரல் எழுப்பவில்லை, பிரிட்டனில் மரண தண்டனை ஒழிக்கப்பட்டுவிட்டதால், இந்த வழக்கிலும் குற்றவாளிகளுக்கு ஆயுள் தண்டனையே கிடைத்தது.

இதுவரையிலும் உலகில் இங்கிலாந்து, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா உள்ளிட்ட 67 நாடுகள் மரண தண்டனையை ஒழித்துவிட்டன. மேலும், 26 நாடுகள் சட்டத்தில் வைத்திருந்தாலும் நடைமுறையில் மரண தண்டனையைப் பயன்படுத்துவதில்லை. அவை கடந்த பத்து ஆண்டுகளாக மரண தண்டனையை நிறைவேற்றுவதில்லை, மேலும் 17 நாடுகளில் போர்க் குற்றங்கள், ராணுவச் சட்டத்தின்கீழ் தவிர, வேறு எந்தக் குற்றத்துக்கும் மரண தண்டனை கிடையாது என்று மாற்றிவிட்டன.

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையம் ஆறு மாதங்களுக்கு முன்னால் உலகம் முழுதும் மரண தண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்பதற்கு ஆதரவாகத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. ஐ.நாவின் மனித உரிமைப் பிரகடனத்தின் பொன்விழா சமயத்தில் 1998-ல் அதன் செயலாளர் உலக நாடுகளில் இன்னும் மரண தண்டனையை ஒழிக்காத நாடுகள் எல்லாம் இப்போதாவது ஒழித்துவிட வேண்டும் என்று வேண்டிக் கொண்டார். யுகோஸ்லேவியாவிலும் ருவாண்டாவிலும் நடந்த போர், இன வெறி கொலைகள் பற்றி விசாரிக்க ஐ.நா அமைத்த டிரிப்யூனல்கள் யாருக்கும் மரண தண்டனை விதிக்கக்கூடாது என்றே அறிவுறுத்தப்பட்டுள்ளன.

தென் ஆப்பிரிக்காவில் மண்டேலா அரசு பொறுப்பேற்றவுடன் அங்கே மரண தண்டனையை ஒழித்தது. ‘ஏழைக் குற்றவாளிகள் தான் நிறையவே தூக்கிலிடப்படுகிறார்கள். பணக்காரக் குற்றவாளிகள் சட்டத்தின் நுட்பங்களைப் பயன்படுத்தித் தங்களைத் தூக்கி லிருந்து காப்பாற்றும் அறிவு படைத்த வழக்கறிஞர்களைப் பெரும் செலவில் அமர்த்திக்கொள்ள முடிகிறது’ என்று தென் ஆப்பிரிக்க உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி கால்சன் தெரிவித்திருக்கிறார்.

இந்தியாவில் காந்தியிலிருந்து கலைஞர் கருணாநிதி வரை பலரும் மரண தண்டனையை ஆதரிக்கவில்லை. “சிறைத் தண்டனையைத் திரும்பப் பெறமுடியும். உடலுக்கு ஊறு செய்யும்

தண்டனையைப் பெற்றவருக்குக்கூட ஏதோ ஒரு இழப்பீடு செய்ய முடியும். ஆனால், ஒருவரைச் சாகடித்துவிட்டால், அந்தத் தண்டனையைத் திரும்பப் பெறவும் முடியாது. இழப்பீடும் செய்ய முடியாது. கடவுள் தந்த உயிரைப் பறிக்க மனிதனுக்கும் உரிமை இல்லை, அரசுக்கும் அந்த உரிமை இல்லை..” என்றார் காந்தி.

தத்துவ அறிஞர் என்று உலக அளவில் புகழப்பட்ட டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் ஜனாதிபதியாக இருந்தபோது, தன் பதவிக் காலத்தில் எந்த மரண தண்டனைக்கும் தான் சம்மதம் தந்துவிடக்கூடாது என்பதில் கவனமாக இருந்தார். நீதிபதிகள் வி.ஆர், கிருஷ்ணய்யர், பி.என். பகவதி இருவரும் தொடர்ந்து மரண தண்டனை ஒழிப்புக்குப் பிரசாரம் செய்து வருகிறார்கள். மனித உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கும் எழுத்தாளர் மஹேஸ்வதேவி தனக்கு ஞானபீடப் பரிசு அளிக்க வந்த ஜனாதிபதியிடம் முறையிட்டு, ஆந்திராவில் பஸ் எரிப்பு, கொலைக் குற்றத்துக்காகத் தூக்குத் தண்டனை பெறவிருந்த இரு இளைஞர்களின் உயிரைக் காப்பாற்றினார்!

மரண தண்டனை தேவை என்று சொல்பவர்கள் அதற்காக முன்வைக்கும் முக்கியமான வாதம், மறுபடியும் வேறு யாரும் அத்தகைய குற்றத்தில் ஈடுபடாமல் தடுக்க இது பயன்படும் என்பதுதான், மகாத்மா காந்தியைக் கொன்றவர்களைத் தூக்கிலிட்டோம். இந்திரா காந்தி கொல்லப்படுவதை அது தடுக்கவில்லை. இந்திராவின் கொலையாளிகளைத் தூக்கிலிட்டோம். ஆனாலும் ராஜீவ் காந்தி கொல்லப்பட்டார். கொலைகள் நடக்காமல் தடுப்பதற்கு மரண தண்டனை எந்த விதத்திலும் உதவவில்லை என்பது உலகம் முழுவதும் நிரூபணமாகிவிட்டது. அதேபோல், மரண தண்டனை இல்லாவிட்டால் கொலைகள் அதிகரித்துவிடும் என்ற துணை வாதமும் நிரூபிக்கப்படவில்லை. இங்கிலாந்தில் மறுபடியும் மரண தண்டனை கொண்டுவரப்பட வேண்டும் என்று மார்க்கரெட் தாட்சர் முயற்சித்தார். அதையொட்டி, ஐரோப்பா முழுவதும் சென்று மரண தண்டனை நீக்கப்பட்ட நாடுகளில், வன்முறை, கொலைக் குற்றங்கள் அதிகமாகி விட்டனவா என்று ஆராய ராயல் கமிஷன்கள் அனுப்பப்பட்டன. மரண தண்டனையால் குற்றங்கள் நீங்கவும் குறையவும் இல்லை. அது இல்லாததால், அவை கே.ஆர். நாராயணன் அதிகரிக்கவும் இல்லை என்ற முடிவே கிடைத்தது.

மரண தண்டனையை நீக்க முடியாது என்று பிடிவாதமாக உள்ள நாடுகளில் முக்கியமானவை இந்தியா, அமெரிக்கா, பாகிஸ்தான் ஆகியவை. இவற்றிலும் அமெரிக்காவில் ஒவ்வொரு மாநிலத்திலும் இது பற்றி வெவ்வேறு அணுகுமுறை இருக்கிறது. இந்தியாவில் பல முறை ஜனாதிபதியின் கருணை அடிப்படையில் மரண தண்டனை ஆயுள், தண்டனையாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் ஜனாதிபதி கருணை மனுவை நிராகரித்த பிறகும்கூட, ஒரு தூக்கு தண்டனை நிறுத்தப்பட்ட வரலாறு - உண்டு. இந்த - முன்னுதாரணத்தை ஏற்படுத்தியவர் நீதிபதி வி.ஆர். கிருஷ்ணய்யர்தான்.

உலகிலேயே தேர்தல் மூலம் ஆட்சியை அமைத்த முதல் கம்யூனிஸ்ட் அரசு என்ற புகழ் பெற்ற கேரள மாநில கம்யூனிஸ்ட் ஆட்சியில் உள்துறை அமைச்சராக கிருஷ்ணய்யர்

இருந்தபோது இந்த நிகழ்ச்சி நடைபெற்றது. ஏப்ரல் 1957-ல் கம்யூனிஸ்ட் அரசு பதவி ஏற்பதற்கும் முன்பாகவே சி.ஏ. பாலன் என்பவருக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. அவரது மனுக்களை கவர்னரும் ஜனாதிபதியும் நிராகரித்திருந்தார்கள். மறுபடியும் மனு உள்துறை அமைச்சரான கிருஷ்ணய்யருக்கு வந்தது. அவர் தூக்குத் தண்டனையைக் கைவிடும்படி, கவர்னருக்கு எழுதினார். அதற்குள் டெல்லியிலிருந்து மத்திய அமைச்சர் கோவிந்த் வல்லப பந்த், கிருஷ்ணய்யாருக்கு ஒரு கடிதம் அனுப்பினார். ஜனாதிபதி நிராகரித்த பிறகு, கவர்னர் மறுபடியும் மனுவைப் பரிசீலனைக்கு எடுக்க அதிகாரம் இல்லை என்று சட்ட அறிஞர் சேத்தல்வாடின் கருத்தை அதில் பந்த் சுட்டிக் காட்டினார். எங்கள் மாநிலத்தின் தலைமை வழக்கறிஞர் சூர்யநாராயணா மாறுபட்ட சட்டக் கருத்தைத் தெரிவிக்கிறார் என்று பதில் கடிதம் எழுதினார் கிருஷ்ணய்யர். பெரும் அரசியல், சட்ட மோதல்கள் ஏற்படும் சூழ்நிலை வந்தது. தன் கருத்தைத் தானே மறுபரிசீலனை செய்யும் அதிகாரமும் ஜனாதிபதிக்கு உண்டு என்று கிருஷ்ணய்யர் சொன்னதை கடைசியில் பந்த் ஏற்றுக் கொண்டார். கிருஷ்ணய்யரின் கடிதத்தின் அடிப்படையில் பந்த், ஜனாதிபதிக்குப் புதிய பரிந்துரையை அனுப்பினார். அதை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டு, சி.ஏ, பாலனின் தூக்குத் தண்டனை மாற்றப்பட்டது. (பின்னாளில் பாலன் தன் அனுபவங்களைத் 'தூக்குமரத்தின் நிழலில்' என்ற தலைப்பில் நூலாக எழுதினார். ஜெயகாந்தனின் கதைகளை அவர் மலையாளத்தில் மொழிபெயர்த்திருக்கிறார்.

கேரளாவில் கிருஷ்ணய்யர் உள்துறை அமைச்சராக இருந்தபோது, தூக்குத் தண்டனை வழக்குகளில் பின்பற்றிய இன்னொரு அணுகு முறையும் முக்கியமானது, தூக்குத் தண்டனையைக் குறைக்கும்படி அவர் பரிந்துரைத்து கவர்னருக்கு கோப்புகளை அனுப்புவார். முடிவெடுப்பதற்குத் தனக்கு வழக்கு விசாரணை பற்றிய எல்லா விவரங்களும் தேவை என்று கவர்னர் கேட்டால், அதை கிருஷ்ணய்யர் ஏற்கவில்லை, மாநில அமைச்சரவை ஒரு தீர்மானம் நிறைவேற்றி அனுப்பினால், அதற்கு மாறாக முடிவெடுக்க கவர்னருக்குச் சட்டப்படி அதிகாரம் இல்லை என்பது. கிருஷ்ணய்யரின் கருத்து. பின்னாளில் உச்ச நீதிமன்ற நீதிபதியாக இருந்தபோது, இதை அவர் ஒரு தீர்ப்பிலும் தெரிவித்திருக்கிறார். இதன்படி பார்த்தால், தூக்குத் தண்டனைக்கு எதிரான கருத்து உடைய தமிழக முதல்வர் கருணாநிதி தன் அமைச்சரவை சார்பில் நளினி, முருகன், பேரறிவாளன், சாந்தன் ஆகியோரின் தண்டனையைக் குறைக்கும்படி தீர்மானம் நிறை வேற்றி அனுப்பினால், அதை கவர்னர் பாத்திமா பீவி ஏற்றுக்கொண்டுதான் ஆகவேண்டும். ஜனாதிபதி கே.ஆர். நாராயணன் கருணை மனுவை நிராகரித்தாலும், மத்திய உள்துறை அமைச்சர் அத்வானி இன்னொரு பரிந்துரை அனுப்பினால், தன் முடிவை மாற்றிக்கொள்ளலாம். இரண்டுக்கும் முன்னுதாரணங்கள் உள்ளன. நடக்குமா? நடக்குமானால், மரண தண்டனையை ஒழித்த நாடுகளின் பட்டியலில் இந்தியாவும் இனைய வேண்டும் என்று விரும்பும் மனித உரிமையாளர்கள் எல்லாருக்கும் கிடைக்கும் முக்கியமான வெற்றியாக இது அமையும்.

**நவம்பர் 7 ,1999,**
**ஜூனியர் விகடன்**